# சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி, திருப்பூர்

## இளநிலைப் பட்டவகுப்புகளுக்கு ஆன்லைனில் விண்ணப்பம்

**2026-2027** ஆம் கல்வியாண்டிற்குரிய இளநிலைப் பட்ட வகுப்புகளுக்கான மாணவர் சேர்க்கைக்காக www.tngasa.in என்ற இணைய முகவரியில் 07.05.2026 முதல் ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கலாம்.

சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரியில் ஷிப்ட் 1 இல் பி.காம்(100), பிகாம் (சிஏ)60, பிகாம் சர்வதேச வணிகவியல்(50), பிபிஏ(50), வரலாறு(50) ,பொருளியல்(30), தமிழ் இலக்கியம்(30), ஆங்கில இலக்கியம்(50), இயற்பியல்(30), வேதியியல்(60) , கணிதம்(48), கணினி அறிவியல்(60), கணினிபயன்பாட்டியல் (பிசிஏ)50, விலங்கியல்(60), ஆடை வடிவமைப்பு நாகரிகம்(50) ஆகிய பாடப்பிரிவுகளிலும், ஷிப்ட் 2 இல் பி.காம்(60), பிகாம் (சிஏ)60, பிகாம் சர்வதேச வணிகவியல்(50), கணினி அறிவியல் (60) செயல்படுகின்றன. மொத்தமுள்ள **1008** இடங்களுக்கு **தமிழக அரசின் இடஒதுக்கீடு மற்றும் மதிப்பெண்கள் அடிப்படையில் மாணவர் சேர்க்கை நடைபெற உள்ளது.**

விண்ணப்பிக்கும் மாணவர்கள் முதலில் www.tngasa.in என்ற இணையதளத்தில் பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்த பின்னரே தாம் சேர விரும்பும் கல்லூரிகளுக்கும், சேர விரும்பும் பாடப்பிரிவுகளுக்கும் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பதாரர் தங்கள் செல்பேசி, மின்னஞ்சல் முகவரியினை வைத்திருக்க வேண்டும். இதன்மூலம் மாணவர் சேர்க்கைக் கலந்தாய்வு குறித்த செய்தி அனுப்பப்படும். மேலும், பதிவு செய்ய பள்ளியில் வழங்கப்பட்ட எமிஸ்(EMIS) எண், +2 பதிவெண், சாதிச்சான்றிதழ் வரிசை எண், ஆதார் எண், மதிப்பெண்கள் தேவைப்படும். ஒரு கல்லூரியில் உள்ள தகுதியுடைய அனைத்து பாடப்பிரிவுகளுக்கும் விண்ணப்பிக்கலாம். பூர்த்தி செய்த விண்ணப்பத்தைப் பதிவிறக்கம் செய்து பிரிண்ட் எடுத்துக் கொள்ள வேண்டும். கலந்தாய்வுக்கு முன்னர் மாணவர்கள் தங்கள் ஆதார் அட்டையினை இ சேவை மையம் மூலம் அப்டேட் செய்து கொள்ளுதல் அவசியம். சாதிச்சான்றிதழையும் மின் ஆளுமை சான்றிதழாக (e-certificate) பெற்றிருத்தல் வேண்டும். அரசு உதவித்தொகையினைப் பெற ஆதார் எண்ணை மாணவர்கள் பெயரில் உள்ள வங்கிக்கணக்கு அல்லது அஞ்சல் வங்கிக்கணக்கில் இணைத்தல் முக்கியமானது. மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு தேதி பின்னர் தெரிவிக்கப்படும். மேலும் அதிக விவரங்களுக்கு இணையதளத்தில் தகவல்களைப் பார்த்து அறிந்து கொள்ளலாம். சந்தேகங்கள் இருப்பின் திங்கள் முதல் வெள்ளிக்கிழமை நாட்களில் கல்லூரியில் உள்ள மாணவர் தகவல் மையத்தில் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை அணுகலாம்.

இத் தகவலைக் கல்லூரி முதல்வர் முனைவர் வ.கிருஷ்ணன் அவர்கள் தெரிவித்தார்.

முதல்வர்

**முதல்வர்**
**சிக்கண்ணா அரசு கலைக்கல்லூரி**
**திருப்பூர்.**

திருப்பூர்
07.05.2026